*மக்கள் ஆய்வகம்*

*வழங்கும்*

# இடைத்தேர்தல் சூழலில் பெண்ணாகரம் 2010: கள ஆய்வு முடிவுகள்

*கள ஆய்வு நடந்த நாள்கள்:*

2010 ஜனவரி 29-31 மற்றும் மார்ச் 19-21

*ஊடகவியலார் சந்திப்பு:*

24 மார்ச் 2010

# மக்கள் ஆய்வகம்

*வழங்கும்*

## இடைத்தேர்தல் சூழலில் பென்னாகரம் 2010:

## கள ஆய்வு முடிவுகள்

### ஆய்வகப் பின்னணி

“மக்களை ஆய்வது மக்களுக்காகவே” என்ற கொள்கையுடன், கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக, மக்களை மையப்படுத்திய பல்துறை ஆய்வுகளையும் பரப்புரைகளையும் மேற்கொண்டு வருவது ***மக்கள் ஆய்வகம்***. இதற்கெனத் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும், கருத்துக் கணிப்பியலில் முறையான பயிற்சிபெற்ற களஆய்வாளர் குழுக்களையும், பரப்புரைக்கெனக் கலைக் குழுக்களையும் நடத்தி வருகிறது.

தமிழகம் மட்டுமன்றி, கர்நாடகம், ஆந்திரா, கேரளா ஆகிய தென் மாநிலங்களிலும் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. கடந்த 2008-ஆம் ஆண்டு நடந்த கர்நாடக மாநிலச் சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, மாநிலந் தழுவிய இரு சுற்றுக் களஆய்வுகளை மேற்கொண்டு, கர்நாடக மக்கள் மனநிலையை மிகத் துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டியது குறிப்பிடத் தக்கது.

### ஆய்வு அணுகுமுறை

இந்திய/தமிழகப் பண்பாட்டு-அரசியல் சூழலுக்கேற்ப, எண்ணியல் (quantitative) மற்றும் பண்பியல் (qualitative) கூறுகளை உள்ளடக்கி, பேரா. டாக்டர் ச. ராஜநாயகம் உருவாக்கியுள்ள *சமூக-உளவியல் அணுகுமுறையை* (social-psychological approach) பின்பற்றி, இடைத்தேர்தலை எதிர்நோக்கியுள்ள பென்னாகரம் சட்டமன்றத் தொகுதியில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. யாருக்கு வாக்களிப்பது என வாக்காளர் முடிவுசெய்வதில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளை இனங் காணவும், அவற்றின் தாக்கத்தால் வாக்காளரின் எண்ணப் போக்கில் ஏற்படும் மாற்றங்களைப் பதிவு செய்யவும் இரு கட்டங்களாகக் களஆய்வு செய்யப்பட்டது (ஜனவரி 29-31 மற்றும் மார்ச் 19-21).

முதற்கட்ட ஜனவரி ஆய்வில் 45 இடங்களில் 500 பேரிடமும், இரண்டாம் கட்ட மார்ச் ஆய்வில் 100 இடங்களில் 1225 பேரிடமும் கருத்துக்கள் சேகரிக்கப்பட்டன. ஆய்வாளர்கள், ஆய்வு உதவியாளர்கள், களப்பணியாளர்கள் என 20 பேர் இந்த ஆய்வில் ஈடுபட்டனர்.

### பங்கேற்றோர் பின்னணி

களஆய்வில் பங்கேற்றோரில் பெண்கள் 34.0, ஆண்கள் 66.0. *வயதுரீதியாக*, 30 வயது வரை - 26.9, வயது 31 முதல் 45 வரை - 37.1, வயது 46 முதல் 60 வரை - 23.3 (மீதி - வயது 60-க்கு மேல்). இந்த இடைத் தேர்தலில் தமது முதல் வாக்கைச் செலுத்தவுள்ளவர்கள் - 4.9.

*கல்விரீதியாக*, படிக்காதவர்கள் - 30.2, வகுப்பு 5 வரை படித்துள்ளவர்கள் - 22.9, வகுப்பு 6 முதல் 12 வரை படித்துள்ளவர்கள் - 34.3 (மீதி - கல்லூரிக் கல்வி உள்ளிட்ட பிறவகைப் படிப்புக்கள்).

*தொழில்ரீதியாக*, கூலித் தொழிலாளர் - 35.9, சொந்த விவசாயம் - 13.9, சொந்தத் தொழில் செய்வோர் - 26.1, தனியார் நிறுவனத்தில் வேலை செய்வோர் - 6.9, அரசு ஊழியர் - 2.4 (மீதி - வேறு வேலைகள் / வேலையற்றோர் / மாணவர்கள்).

*இனரீதியாக*, தாழ்த்தப்பட்டோர் - 14.3, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் - 71.0, பிற்படுத்தப் பட்டோர் - 13.1 (மீதி - பிற இனத்தினர் / சாதி தெரிவிக்காதோர்).

**01. *முக்கியப் பிரச்சனை:***

பென்னாகரம் தொகுதியின் முக்கியப் பிரச்சனையாக, குடிதண்ணீர் வசதி இல்லை என்பது மிகப் பெரும்பான்மையான மக்களால் குறிப்பிடப்படுகிறது.

| | |
|---|---|
| **குடிதண்ணீர் வசதி இல்லை** | **80.6** |
| வேலையில்லாத் திண்டாட்டம் | 8.2 |
| **கழிப்பிட வசதி இல்லை** | **5.4** |
| சாலை/பஸ் வசதி இல்லை | 3.6 |
| **தொழில் வளர்ச்சியில்லை** | **2.2** |

***02. பிரச்சனையைத் தீர்க்கும் கட்சி:***

கட்சி விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால், தமது தொகுதியில் எந்தக் கட்சி வேட்பாளர் வெற்றி பெற்றால் அத் தொகுதியின் பிரச்சனைகள் தீரும் என்பதைப் பொருத்தவரை, திமுக முதலிடம் பெறுகிறது. எனினும், ஏறத்தாழ அதற்கு இணையானோர் யார் ஜெயித்தாலும் பிரச்சனைகள் தீராது என விரக்தியை வெளிப்படுத்தியிருப்பதும் கவனிக்கத் தக்கது.

| | |
|---|---|
| **திமுக** | **34.5** |
| பாமக | 21.9 |
| **அதிமுக** | **10.6** |
| தேமுதிக | 2.0 |
| **யார் ஜெயித்தாலும் தீராது** | **31.0** |

***03. வாக்கு யாருக்கு?***

தற்போதுள்ள அரசியல் சூழலில், இன்று வாக்களிப்பதாக இருந்தால், யாருக்கு மக்கள் வாக்களிப்பார்கள் என்பது குறித்த ஜனவரி மற்றும் மார்ச் மாத களஆய்வுகளில் திமுக முதலிடம் பெற்று விளங்குகிறது.

| ***கட்சி*** | ***மார்ச் 19-21*** | ***ஜனவரி 29-31*** |
|---|---|---|
| திமுக | 44.9 | 40.1 |
| **பாமக** | **23.3** | **31.8** |
| அதிமுக | 15.5 | 8.0 |
| **தேமுதிக** | **3.5** | **6.1** |
| பிறர் / சுயேட்சை | 0.4 | 0.2 |
| **எதிர்மறை வாக்கு - 49(O)** | **0.5** | **2.5** |
| தேர்தல் புறக்கணிப்பு | 1.8 | 1.0 |
| **முடிவுசெய்யவில்லை/சொல்லமுடியாது** | **10.1** | **10.3** |

ஜனவரி முடிவுகளுடன் மார்ச் முடிவுகளை ஒப்பிடும்போது, மக்களின் மனப்போக்கில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்து வந்துள்ளதை அறிய முடிகிறது. ஜனவரியில் திமுக-வுக்கு மிக வலுவான போட்டியாக இருந்த பாமக, மார்ச்சில் திமுக-வுக்கு உள்ள ஆதரவில் பாதியாக வலுக் குறைந்துள்ளது. அவ்வாறே, தேமுதிக-வுக்கு உள்ள ஆதரவிலும் சரிவு ஏற்பட்டுள்ளது. இதற்கு மாறாக, அதிமுக-விற்கான ஆதரவு ஏறத்தாழ இரு மடங்காகியுள்ள வேளையில் திமுக-வின் வாக்கு வங்கியும் கணிசமாக உயர்ந்துள்ளது.

### *04. வன்னியர் வாக்கு:*

பென்னாகரம் தொகுதியின் பெரும்பான்மைச் சமுதாயமான (கணிப்பில் கலந்து கொண்டோரில் 71 விழுக்காடு) வன்னியர் மத்தியில் கட்சிகளின் செல்வாக்கு:

| | |
|---|---|
| திமுக | 44.5 |
| பாமக | 27.6 |
| அதிமுக | 15.7 |
| தேமுதிக | 2.3 |

### *05. தேர்தல் முறையில் அதிருப்தி:*

தற்போது தேர்தல் நடக்கும் விதம் குறித்து வாக்காளரிடையே மிகப் பரவலான அதிருப்தி நிலவுகிறது (அதிருப்தி - 63.6, திருப்தி - 36.4). அதிருப்திக்கான காரணங்களாகத் தேர்தல் முறையிலுள்ள பல பலவீனங்கள் சுட்டிக் காட்டப்படுகின்றன. அவற்றுள் முக்கியமானவை:

| | |
|---|---|
| வாக்குகளை விலைக்கு வாங்குவது | 63.0 |
| கள்ள ஓட்டுப் போடுவது | 26.3 |
| வாக்களிக்குமாறு மிரட்டுவது | 5.7 |
| வாக்களிக்க விடாமல் தடுப்பது | 3.4 |
| வன்முறையில் இறங்கி வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றுவது | 1.6 |

### *06. வாக்குக்குப் பணம் / பரிசு:*

(அ) பணம், பரிசுப் பொருட்கள் தருவது உட்படப் பல்வேறு வழிகளில் அரசியல் கட்சிகள் வாக்காளரைக் கவனித்துக் கொள்கின்றன என்பதே பென்னாகரம் தொகுதியின் ஏகோபித்த கருத்தாக வெளிப்படுகிறது (பணம் / பொருள் ***தரப்படுகிறது - 83.5***, தெரியாது - 12.7, யாரும் தரவில்லை - 3.8).

(ஆ) எனினும், தனக்குத் தந்துள்ளதாக / இனிமேல் தருவதாக உத்திரவாதம் அளித்துள்ளதாக ***ஒத்துக் கொள்வோர் 48.3*** மட்டுமே.

(இ) தமக்கு / தமக்குத் தெரிந்து இதுவரை பணம் வழங்கியுள்ள கட்சிகளாக வாக்காளர்கள் சுட்டிக் காட்டுபவற்றில் திமுக முதலிடம் வகிக்கிறது.

| | |
|---|---|
| திமுக | 44.1 |
| அதிமுக | 5.3 |
| பாமக | 1.2 |
| தேமுதிக | 0.8 |

(ஈ) ஒரு கட்சியிடம் பணம் வாங்கிக் கொண்டு வாக்களிப்பது சரியா தவறா என்பது குறித்து வாக்காளரிடையே கூர்மையான பிளவு நிலவுகிறது:

| | |
|---|---|
| வாக்குக்குப் பணம் வாங்குவதில் ***தவறில்லை*** | 47.4 |
| வாங்குவது ***தவறு*** | 49.6 |

### *07. தேர்தல் ஆணையத்தின் செயல்பாடு:*

பென்னாகரம் தொகுதியில் தேர்தல் ஆணையத்தின் தற்போதைய செயல்பாடு குறித்துத் தெரிவித்துள்ள கருத்துக்கள் கட்சிக்குக் கட்சி வேறுபடுகின்றன. பாமக-வுக்கு வாக்களிக்கப் போவதாகச் சொல்வோரிடையே கடும் விமர்சனத்தையும், திமுக-வுக்கு வாக்களிக்கப்போவதாகச் சொல்வோரிடையே பரவலான பாராட்டுதலையும் தேர்தல் ஆணையம் எதிர்கொள்கிறது.

| *வாக்களிக்கப்போகும் கட்சி* | *தேர்தல் ஆணையத்தின் செயல்பாடு* | | |
|---|---|---|---|
| | *நன்று* | *குறிப்பிட்டுச் சொல்லும்படி எதுவுமில்லை* | *மோசம்* |
| திமுக | 62.2 | 33.3 | 4.5 |
| அதிமுக | 40.5 | 43.2 | 16.2 |
| பாமக | 34.7 | 34.8 | 30.5 |
| தேமுதிக | 20.0 | 60.0 | 20.0 |

### *08. இடைத்தேர்தல் தேவையா?*

சமீப காலங்களில் இடைத்தேர்தல்கள் நடந்துள்ள விதத்தின் பின்னணியில், இடைத்தேர்தல்கள் நடத்துவதற்கு ஆதரவும் எதிர்ப்பும் மிக வலுவாகப் பதிவாகியுள்ளன.

| | | |
|---|---|---|
| இடைத்தேர்தல்கள் நடத்துவதற்கு | ***ஆதரவு*** | 42.6 |
| | ***எதிர்ப்பு*** | 40.4 |

*ஆதரிப்பதற்கான காரணங்களில் முக்கியமானவை:* இது ஜனநாயக உரிமை (18.9), மக்கள் சிறப்பாகக் கவனிக்கப்படும் வாய்ப்பு (13.5), கருப்புப் பணம் வெளியே வரும் வாய்ப்பு (7.3).

*எதிர்ப்பதற்கான காரணங்களில் முக்கியமானவை:* கட்டவிழ்த்து விடப்படும் தேர்தல் தில்லுமுல்லுகள் (23.2), அதிகாரத் துஷ்பிரயோகம் (11.6), அரசுக்கு வீண் செலவு (4.1).

## *களத்தில் கண்டவை*

(அ) "இனமா? பணமா?" "ஜனநாயகமா? பணநாயகமா?" என்ற முரண்களில், பென்னாகரம் தொகுதியின் தற்போதைய நிலவரப்படி, பணத்தின் பக்கம் சற்றுப் பலமாகவே காற்று வீசுகிறது.

(ஆ) "வாக்குக்குப் பணம்" என்பதைக் குறித்து எந்தவிதக் குற்ற உணர்வும் வாக்காளரிடையே வெளிப்படவில்லை. பணம் வாங்குவது தவறு என ஒப்புக்குச் சொல்பவர்கள் கூட, தமக்குப் பணம் தரப்படும் பட்சத்தில் பொதுவாக மறுப்பதில்லை.

(இ) களத்தில் இருக்கும் கட்சிகள் பிரச்சாரம் செய்வதில் ஒன்றோடொன்று போட்டிபோடுவதை விட, அடுத்த கட்சி பணம் விநியோகம் செய்வதைக் கண்டுபிடித்துத் தடுப்பதிலும், அடுத்த கட்சிக்குத் தெரியாமல் தாம் பணம் விநியோகம் செய்வதிலும்தான் போட்டி கடுமையாக உள்ளது. தொகுதிக்கு வெளியிலிருந்து குவிந்துள்ள தொண்டர்களின் தலையாய கட்சிப் பணி இதுதான்.

(ஈ) பகல் நேரத்திலேயே தொகுதியில் பரவலாக மது வெள்ளம் கரைபுரண்டோடுகிறது. மாலையானால் தொகுதியின் எந்தக் கிராமமும் விதிவிலக்கல்ல.

(உ) தொகுதியின் பல கிராமங்களில் வீதி வீதியாகச் செல்லும் பிரச்சாரத்தில் சிறார்கள் பெருவாரியாக ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

(ஊ) சாமானிய மக்களை மிரளவைக்கும் படை/போலிஸ் என சண்டியர் தோரணை காட்டும் தேர்தல் ஆணையம், கண்முன்னே அரங்கேறும் அத்துமீறல்களை ஒடுக்க முடியாமல் கையறு நிலையில் தவிக்கிறது.

பேரா. டாக்டர் ச. ராஜநாயகம்
& குழுவினர்
24.03.2010

***குறிப்புகள்:*** (01) மக்கள் கருத்துக்களைத் தெரிவிக்கப் பயன்படுத்தியுள்ள எண்கள் அனைத்தும் சதவீதத்தைக் குறிக்கின்றன. (02) பெரும்பாலான கேள்விகளுக்கு மக்களின் முக்கியமான கருத்துக்கள் மட்டுமே இந்த ஆய்வறிக்கையில் இடம்பெற்றிருப்பதால், சதவீதத்தின் கூட்டுத்தொகை 100-ஆக இருக்காது.

மக்கள் ஆய்வகம்
லொயோலா கல்லூரி, சென்னை 600 034